1980 ஆகஸ்ட் 1]

(ஒ) வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1980) ஆய்வுக்கு* எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழக விவசாயிகள் எப்படி மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக்கொண்டு, ஒளியைத் தருகின்றதோ. அதைப் போன்ற விவசாயிகள் மக்கள் அதிகமான கடன் சுமையாலும் தாங்கள் விவசாயம செய்யக்கூடிய விளைபொருள்களுக்கு நியாய மான விலை கிடைக்காத காரணத்தினாலும், உற்பத்தி செய்கின்ற நேரத்திலே உரம்போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தாலும், தேவையான நேரத்திலே மின்சாரம் கிடைக்காத காரணத்தினாலும், டீசல்போன்ற பல்வேறு பொருள்கள் கிடைப் பது கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினாலும்; விவசாய மக்க ளுக்கு இந்த மசோதா ஒருவித திருப்தியை அளித்தாலும்கூட நம்முடைய அரசாங்கம் எப்படி ஒட்டகத்தின்மீது அதிகமான சுமையை ஏற்றிவிட்டு, ஒன்றிரண்டு பொருட்களை எடுத்துவிட்டு அதிகமான சுமையை தூக்க வேண்டுமென்று ஓட்டப்படுகிறதோ அதேபோன்ற நினைத்துக் கொள்ளாமல் இந்த அறிக்கை யிலே சொல்லியுள்ளபடி, விவசாய உயர்மட்டக் குழுவின் சார் பாகக் கேட்டார்கள்; நாங்கள் அதை உயர்மட்டக் குழுவிற்கு அனுப்பினோம். அவர்கள் வேண்டாம் என்று பரிந்துரை செய் திருக்கிறார்கள்.

[முற்பகல் 11-20]

அதை ஏற்று இதை ரத்து செய்கிறோம் என்று சொல்வதைப் போல் இன்று பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைத்திருக்கிறார்கள். அவற்றை நம்முடைய அரசாங்கம் உயர்மட்டக்குழுவுக்கு அனுப்பி அந்தக் குழுவினுடைய பரிந்துரை என்ன சொல்லுகிறதோ அதையாவது ஏற்று விவசாயிகளுக்கு நல்லது செய்யவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று முடிக்கிறேன். வணக் கம்.

---

*1980ஆம் ஆண்டு ஜூன் 18ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். ஏற்கனவே, அந்த விவசாயிகள் எல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையில் அந்த வரிகள் எல்லாம் வசூலிக்கப்படாமலே விடப்பட்டது. 1976ஆம் ஆண்டிலிருந்து இது அமுலில் இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் எங்காவது விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தால் அப்படி வசூலித்த விவசாயிகளுக்குத் திருப்பிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்ற கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது அவசரநிலை காலத்திலும் 1976ஆம் ஆண்டில் மத்திய அரசின் சி. சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்டது. அது நடைமுறையில் ஒத்து வரவில்லை என்பதைக் கணக்கில் கொண்டு இன்றைக்கு இந்த மசோதாவில் உள்ள வரிகளைத் தள்ளுபடி செய்கிறோம். இந்தத் திருத்த மசோதாவை நாங்கள் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்த விவசாயிகளுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் நன்மை செய்வதோடு, தமிழ்நாடு விவசாயச் சங்கம் தொடர்ச்சியாகப் பல கோரிக்கைகள் வைத்திருப்பதைக் கணக்கெடுத்து உயர்மட்டக் குழுவின் பரிந்துரையோடு அவற்றை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும். அவர்கள் பருத்திக்கு ஆயிரம், நெல்லுக்கு 150 ரூபாய், கடலைக்கு 400 ரூபாய், மிளகாய்வற்றலுக்கு 800 ரூபாய், கரும்புக்கு 175 ரூபாய் என்ற முறையில் பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் இதையெல்லாம் கணக்கில்கொண்டு விவசாயப் பெருமக்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி விவசாயிகளுக்கு ஓரளவு நிவாரணம் கொடுக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது பேசிய உறுப்பினர்கள் அப்படியே இதனை வரவேற்றிருக்கிறார்கள். இந்தச் சட்டம் 1976-ல் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம் என்பது மாமன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் தெரியும். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை விவசாயிகள் இருக்கின்ற வரிகளையே கொடுக்க முடியாமல் தள்ளிப் போடுக்கும்போது புதிதாக வரியை விதிப்பது சரியல்ல என்று இந்த அரசு கருதிய காரணத்தால் எந்த நேரத்தில் இந்த வரி வந்ததோ அந்தக் காலத்தில் இருந்தே இந்தச் சட்டத்தை ரத்து செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் தமிழகத்தைப் பொறுத்த வரை வணிக வரிப் பயிர்களுக்கு இதற்கு முன்னால் வரியே இல்லை. முதல் முதலாக 1976-ல் தான் கொண்டு வந்தார்கள். எந்தெந்தப் பயிர்களுக்குக் கொண்டு வந்தார்கள் என்றால் திராட்சை, கரும்பு, தென்னை, வாழை, மஞ்சள் ஆகியவற்றுக்கு ஒரு ஏக்கருக்கு 20 ரூபாய் கொண்டு வந்தார்கள். புகையிலை, மிளகாய், பருத்தி இவைகளுக்கெல்லாம் ஒரு ஏக்கருக்கு ரூ. 12.50 கொண்டு வந்தார்கள். இதனால் அரசுக்கு எதிர்பார்த்த வருமானம் 2.45 கோடி ரூபாய். ஆனால் இந்த அரசு இந்த வரியைத் தள்ளுபடி செய்வதால் ஒரு ஆண்டுக்கு 2.45 கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1976-லிருந்து இதுநாள் வரைக்கும் என்றால் எவ்வளவு அரசுக்கு நஷ்டம் என்பதை நீங்கள் எண்ணிக் கொள்ளவேண்டும். இங்கே பேசியபோது சிலர் சொன்னார்கள், சில இடங்களிலே வரி வசூலித்திருக்கிறார்கள், என்ன ஆகும் என்று கேட்டார்கள், இதுவரையில் வசூலிக்கப்பட்டது 7,15,340 ரூபாய். அவைகளையும் ரத்து செய்வதற்காக எக்சிகியூடிவ் ஆர்டர் போடுவதற்கு இந்த அரசு உத்தேசித்திருக்கிறது என்று சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரிவிதிப்பு (ரத்து) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.